தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக நேற்று (13.11.2025) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, புதிய கட்டடங்களை திறந்து வைத்ததை தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் அரசு தலைமைக்கொறடா .கா.ராமச்சந்திரன் , மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தண்ணீரு, முன்னிலையில் தோழி விடுதி கட்டுவதற்காக பூமிபூஜையிட்டு பணிகளை தொடங்கி வைத்தார்.உடன் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம் நிர்வாக பொறியாளர் (கோவை மண்டலம்), சீனிவாசன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி பிரவீணா தேவி உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உள்ளனர்.

தென்கிழக்கு வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி!

இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்!

டெல்லி: நவ. 14 -

கடந்த சில வாரங்களுக்கு முன் தென்மேற்கு பருவமழை விடை கொடுத்து வடகிழக்குப் பருவ மழை தொடங்கியது. இதனையடுத்து கடந்த அக்டோபர் மாதம் தமிழ்நாட்டில் 23 செ.மீ. மழை பெய்தது. இது கடந்த 12 ஆண்டுகளில் மூன்றாவது அதிகபட்சமாகும். அதாவது, வடகிழக்கு பருவ மழை சிறப்பாகவே தொடங்கியது எனலாம். ஆனால் நவம்பரில் மழை திடீரென குறைந்தது. நவம்பர் மாதத்தின் முதல் 10 நாட்களில் வெறும் 1.5 செ.மீ. மழை மட்டுமே பதிவாகியுள்ளது. நவம்பர் மாத சராசரி மழை அளவு 18 செ.மீ. என்பதால், இது மிகவும் குறைவு என்று சொல்லப்படுகிறது.

இந்தநிலையில், தென்கிழக்கு வங்கக்கடலில் வரும் 21ம் தேதி புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது மேலும் இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த நாள் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் தமிழகத்தில் கனமழை எதிர்பார்க்கலாம் என தெரிவிக்கப்பட்டு ள்ளது.

தென்மேற்கு மற்றும் அதை ஒட்டிய தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் நேற்று நிலவிய மேல் காற்று சுழற்சி, இன்று, நவம்பர் 13, 2025 அன்று சராசரி கடல் மட்டத்திலிருந்து 1.5 கி.மீ வரை அதே பகுதியில் நீடித்தது, தெற்கு வங்காள விரிகுடாவின் தெற்குப் பகுதிகளில், பூமத்திய ரேகை இந்தியப் பெருங்கடல் மற்றும் தெற்கு அந்தமான் கடலுக்கு அருகில், தீவிரமானது முதல் மிகவும் தீவிரமானது வரையிலான வெப்பச்சலனம் பரவியுள்ளது. தெற்கு வங்காள விரிகுடா மற்றும் வடக்கு அந்தமான் கடலின் மற்ற பகுதிகளில் மிதமானது முதல் தீவிரமானது வரையிலான வெப்பச்சலனம் பரவியுள்ள குறைந்த மற்றும் நடுத்தர மேகங்கள் பரவியுள்ளன.

இந்தநிலையில், தென்கிழக்கு வங்கக்கடலில் வரும் 21ம் தேதி புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது மேலும் இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த நாள் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும்

14112025 மற்றும் 1511 2025 தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 16112025: தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து

புதுக்கோட்டையில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் – வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை!

புதுக்கோட்டை, நவ.14–

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண் டித்து மதச் சார்பற்ற முற் போக்கு கூட்டணி சார்பில் நவம்பர் 11 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை புதுக்கோட்டை அண்ணா சிலை பின்புறம் உள்ள டாக்ஸி ஸ்டாண்ட் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மதச் சார்பற்ற கூட்டணி கட்சி தலைவர்கள், செயலாளர்கள், சங்கர் சிபிஎம், செங்கோடன் சிபிஐ, எஸ்.கே.கலியமூர்த்தி மதிமுக, அறிவொளி திக, வெள்ளை நெஞ்சன் விசிக, அஸ்ரப் அலி முஸ்லிம் லீக், அப்துல் கனி மனித நேய மக்கள் கட்சி, ராஜகோபால் ம.நீ.ம, அப்துல் ஜப்பார் ஆம் ஆத்மி, ரியாஸ் அகம்மது ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். ஆர்ப்பாட்டத்தில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, உதயம் சண்முகம், கார்த்திக் தொண்டைமான், மாநில, மாவட்ட நிர்வாகிகள்

த.சந்திரசேகரன், சுப.சரவணன், கே.ஆர்.என்.போஸ், செ.அசோக்பாண்டியன், அரு.வீரமணி, அ.சுப்பிரமணியன், க.மதியழகன், ஞான. இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், கீரை.தமிழ் ராஜா, சு.சண்முகம், இரா.ஆனந்த், எஸ்.ஜெயராமன், ஆர்.ஆர்.கே.கலைமணி, எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ், க.ராஜேந்திரன்,

ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன், தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், வெ.முத்துக்கிருஷ்ணன், எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, மு.பி.ம. சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, ஓ.எஸ்.வெங்கடாச்சலம். அ.இளங்குமரன், ஆர்.ஆர்.சாமிநாதன், சி.சண்முகம், கே.பி.அய்யப்பன், கோவிந்தராஜ்,

சக்தி ராமசாமி, வே.பொன்துரை, பொன்.கணேசன், பொன்.ராமலிங்கம், கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், அ.முத்து, அ.அடைக்கலமணி, அழகு சிதம்பரம், இரா.கணேசன வி.ஆர்.இளையராஜா, கே.எஸ்.ரவி, குமார்(எ) துரைக்கண்ணு, பேரூர் கழக செயலாளர்கள் பி. அண்ணாத்துரை, உமுருகேசன், வை. விஜயக்குமார், அ.அழகப்பன், கே.சி.சிவக்குமார், ஆ.பழனிக்குமார், நாசர் (எ) செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.சாத்தையா, இராசு சந்தோஷ், எம்.செந்தில்குமார், ஆர்.செல்லத்துரை, த.மணிராஜன், ஆர்.வி.செல்வம், வீரய்யா, கே.எம்.சுப்பிரமணியன், கலைவாணி சுப்பிரமணியன், ரா.கருப்பையா, அ.ரெத்தினம்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எம்.வேலுச்சாமி, டாக்டர் செ.குறிஞ்சிவாணன், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வி.என்.எம்.பாலு, கவிவேந்தன், டி. எம்.ஆர்.ராமமூர்த்தி, என்.வீரையா, சி.அரங்கநாயகம், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, இரா.மேகநாதன், வளர்மதி, பாத்திமா பீவி, தேவி, சக்திவேல், ஆ.கலைச்செல்வன், ஹரி விமலாதி, டாக்டர் சுதர்சன், மணிமொழி மனோகரன், ராஜேந்திர சோழன், அஸ்ரப் அலி, 'வெற்றிச்செல்வன், சிவ.பால இளங்கோ, மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துச்சாமி, விளாப்பட்டி சிவா, அன்சாரி பாஷீத், அருண் சேகர், இரா.தமிழ்ராசு, நசுருதீன், கவிக்குமார், முகம்மது ரபீக், இளையராஜா,மேகலா முத்து, மாலா ராஜேந்திர துரை, மகேஸ்வரி சண்முகநாதன், டாக்டர் கே.என். அமானுல்லா, ராய. முத்துக்குமார், இராம.செல்வராஜ், பூங்குடி சிவா, வடவாளம் க.செ.மணிமாறன், காதர் கனி, டி.அப்புக்காளை, மா.மணிவேலன், பழனிவேலு, கி. சுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

எழும்பூர் தொகுதி 77-வது வார்டில் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ஆய்வு!

பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து நடவடிக்கை மேற்கெண்டார்

சென்னை, நவ. 14 -

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் வழக்கறிஞர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வார்டு எண்.77 க்குட்பட்ட பகுதிகளில் நடந்துவரும் பணிகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டார்.

புளியந்தோப்பு 1 மற்றும் 2ஆவது தெரு, ராஜா தோட்டம் 2வது தெரு, குருசாமி நகர் பிரதான சாலை உள்ளிட்ட பகுதிகளில் குடிநீருடன் கழிவு நீர் கலந்து வருவதாக அப்பகுதி மக்கள் அளித்த புகாரின் அடிப்படையில், சென்னைப் பெருநகரக் குடிநீர் மற்றும் கழிவு நீர் வடிகால் வாரிய அதிகாரிகளோடு அத்தெருக்களில் ஆய்வு மேற்கொண்டு, அக்குறைபாட்டைச் சீர்செய்யுமாறு அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

புளியந்தோப்பு, மோதிலால் தெருகுருசாமி நகர் 10ஆவது தெரு சந்திப்பில் அமைந்துள்ள நியாய விலைக் கடையைப் பார்வையிட்டு, ரேஷன் பொருட்களின் விநியோகம் குறித்து ஆய்வு செய்தார்.

புளியந்தோப்பு, டிமலஸ் சாலை பகுதியில் கழிவு நீர்க் குழாய் இணைக்கும் பணிகள் மற்றும் சாலைகள் செப்பணிடும் பணிகள் நிறைவடையும் நிலையில் இருப்பதையும்;

புளியந்தோப்பு, கே.பி. பார்க் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் நடைபெற்று வரும் குடிநீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்து சுகாதாரமான முறையில் பராமரிக்கும் பணி, மழை நீர் வடிகால்கள், கழிவுநீர்க் குழாய்களைச் சீரமைக்கும் பணி, குப்பைகளை அகற்றும் பணி ஆகியவற்றை ஆய்வு செய்து, இப்பணிகளை விரைந்து முடிக்கும்படி அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுகளின்போது பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாவட்டப் பிரதிநிதிகள் காந்தி, கமலக்கண்ணன்; அவைத் தலைவர் விசுவநாதன், 77 'அ' வட்டத் துணை செயலாளர் ஆர்.ஆரோக்கியம், 77வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சதிஷ், பாக முகவர் கவிதா, கோமகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் இவ்வாய்வில் கலந்துகொண்டனர்.

எழும்பூர் மருத்துவம் - மக்கள் நல்வாழ்த்துறை பயிற்ச்சி மையத்தில் - தமிழ்நாடு

பொது சுகாதாரத்துறை - சிங்கப்பூர் அரசு நடத்திய தாய் சேய் நலனை மேம்படுத்த பயிலரங்கம்!

சிறப்பாக பணிபுரிந்த பயிற்சியாளர்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் விருதுகள் வழங்கினார்!

சென்னை, நவ. 14--

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு குறிக்கோள் என்பது குழந்தைகளின் வாழ்வுநிலை மற்றும் தாய் நலத்தை மேம்பட செய்வதாகும். இந்தியாவில் தாய், சேய், நல சேவைகளில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக திகழ்கிறது. தமிழ்நாட்டின் மகப்பேறு மரண விகிதத்தில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. 2021-22-ம் ஆண்டுகளில் 60-90 ஆக இருந்த மகப்பேறு மரண விகிதம் சீராக குறைந்து 2023-24-ம் ஆண்டு 45 ஆகவும், 24-25-ம் ஆண்டில் 39.2 ஆகவும் குறைந்துள்ளது. மேலும், அகில இந்திய அளவில் 2021-23-ம் ஆண்டிற்கான SRS சர்வே அடிப்படையில் இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாக திகழ்கிறது. தமிழ்நாட்டின் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் அவசரகால மகப்பேறு சிகிச்சைகள் மற்றும் பச்சிளம்குழந்தை உயிர்ப்பித்தல் திறன்களை மேம்படுத்துவதற்கும், தாய் மரணவிகிதம் மற்றும் சிசுமரணவிகிதத்தை மேலும் குறைப்பதற்கும், இது போன்ற சர்வதேச குழுமத்துடன் இணைந்து செயல்படும் திட்டம் மிகவும் உறுதுணையாக அமையும்.

இத்திட்டத்தின்முக்கிய குறிக்கோள்:

கர்ப்பகால அவசர நிகழ்வுகளை குறைப்பதற்கு முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலையில் உள்ள மருத்துவமனைகளில், சிக்கல் உள்ள கர்ப்பிணி தாய்மார்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் திறனையும் மற்றும் அவசரகால மகப்பேறு சிகிச்சைகள் மற்றும் பச்சிளம்குழந்தை உயிர்ப்பித்தல் கட்டமைப்பு மற்றும் மனிதவளமேம்பாடு ஆகிய திறன்களை மேம்படுத்தவும் உதவுகிறது.

இவ்வாறான உலகளாவிய நிறுவனங்களுடன் பங்களிப்பு ஏற்படும்பொழுது அவர்களின் அனுபவங்கள் தமிழ்நாட்டின் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் தாய், சேய், நல சேவை திறனை மேம்படுத்தி நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் குறிக்கோளை எட்டுவதற்கு மிகவும் உதவிகரமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் கடந்த வருடம் 9.2 இலட்சம் கர்ப்பிணிகள் தங்களின் கர்ப்பத்தை பதிவு செய்துள்ளனர். அதில் 8.1 இலட்சம் பிரசவங்கள் நடைபெற்றது. இதில் 49 சதவிகிதம் சுகப்பிரசவமாகவும் (Normal), 51 சதவிகிதம் சிசேரியன் அறுவை சிகிச்சை மூலமாகவும் நடைபெற்றது. மேலும் 56.4 சதவிகிதம், (4.5 இலட்சம்) பிரசவங்கள் அரசு நிலையங்கள் அதாவது அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளிலும், 43.6 சதவிகிதம், (3.5 இலட்சம்) பிரசவங்கள் தனியார் மருத்துவமனைகளிலும் நடைபெறுகிறது. இருப்பினும் ஒரு மகப்பேறு மரணம் கூட நிகழாதவாறு அனைத்து முன்மாதிரி முயற்சிகளையும் மேற்கொள்ள அனைத்து மருத்துவக்கல்லூரி மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கும், மகப்பேறு மருத்துவர்கள் அனைத்து ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கும், அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த நான்கு வருடங்களில் நமது சுகாதார துறையின் சீரிய கர்ப்பக்கால சேவைகள் மூலம் தாய் மரணங்களும் சேய் மரணங்களும் குறைந்து வருகிறது. 2021 - 22- ஆம் ஆண்டில் ஒரு லட்சம் உயிருள்ள பிறப்புக்கு 90 ஆக இருந்த மகப்பேறு மரண விகிதம் 2024-25-ஆம் ஆண்டில் இது 39.5 ஆக குறைக்கப்பட்டுள்ளது. மகப்பேறு மரண விகிதத்தை மேலும் குறைப்பதற்கு சிங்கப்பூர் சர்வதேச குழும த்துடன் இணைந்து செயல்படும் திட்டம் மிகவும் உறுதுணையாக அமையும். 2021-22-ஆம் ஆண்டு 827 மகப்பேறு மரணங்கள் நிகழ்ந்துள்ள நிலையில் 2024-25-ஆம் ஆண்டில் 320 மகப்பேறு மரணங்களாக குறைக்க ப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் சர்வதேச குழுமம்:

இக்குழுமம், 1995 வருடம் முதல் இந்தியாவுடன் பலகாலமாக நட்புறவோடு 200 க்கும் மேற்பட்ட புதுமாதிரியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சிங்கப்பூரில் தாய் மரண விகிதம் 10க்கும் குறைவாக இருப்பதால் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்வுகள் சுகாதாரத்துறையுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. அதே போன்று தமிழகத்தில் தாய் மரண விகிதத்தை குறைப்பதற்கு முதல்கட்டமாக 2015-16 ல் திருச்சி மாவட்டத்தில் மருத்துவர்கள், செவிலியர்களுக்கு தாய்சேய் நல சேவைகளை மேம்படுத்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் Singapore International Foundation(SIF) மற்றும் KK women's and Children's Hospital (Sing Health) ஆகியவை இணைந்து, தமிழ்நாட்டின், முதல்நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு 03.10.2023 முதல் 06.10.2023 வரையில் மொத்தம் 41 மருத்துவ பணியாளர்களுக்கும் மற்றும் 24.06.2024 முதல் 27.06.2024 வரையில் மொத்தம் 76 மருத்துவ பணியாளர்களுக்கும் தாய்,சேய் நல சேவைகளை மேம்படுத்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக இந்த வருடம் 10.11.2025 முதல் 13.11.2025 வரையில் முதல்நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு மகப்பேற்றையும் பச்சிளம்குழந்தை உயிர்ப்பித்தலையும் இணைத்த பயிற்சியினை சிங்கப்பூர் சர்வதேசகுழுமம் (Singapore International Foundation) மற்றும் KK women's and Children's Hospital (Sing Health) ஆகியவை இணைந்து வழங்கியுள்ளது.

மேலும் இந்தியாவிலேயே முதல்முறையாக கடந்த 2006-07 ஆம் ஆண்டிலிருந்து டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி யுதவித்திட்டம் (MRMBS) மூலம், சிசு இறப்புவிகிதம் மற்றும் பேறுகால இறப்பு விகிதங்களை குறைக்கும் உயரிய நோக்கங்களுக்காக ஏழை கர்ப்பிணித்தாய்மார்களுக்கு நிதியுதவி மற்றும் ஊட்டச்சத்து பெட்டகம் ஆகியவை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் கர்ப்பகாலத்தில் சத்தான உணவுக்கு ஆகும் செலவை மேற்கொள்ளவும், கர்ப்பகாலத்தில் ஏற்படும் வருமான இழப்பை ஈடு செய்ய இயல்வதோடு குறைந்த எடையுள்ள குழந்தைகள் பிறப்பதையும் தடுக்கிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தமாக ரூ.14,000 நிதியுதவியும் ரூ.2,000 மதிப்புள்ள இரண்டு ஊட்டச்சத்து பெட்டகங்களும் மூன்று தவணைகளில் ஏழை,எளிய கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வருடந்தோறும் 6.90 லட்சம் கர்ப்பிணி தாய்மார்கள் பயனடைகிறார்கள். தமிழ்நாடு அரசின் இது போன்ற சிறப்பு திட்டங்களினாலும், இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்வதாலும் தமிழ்நாட்டில் கர்ப்பிணி தாய்மார்களின் இறப்பு விகிதம் படிப்படியாக குறைந்துள்ளதுடன் மகப்பேறு மரணம் குறைவாக நடைபெறும் மாநிலங்களில் இந்தியாவிலேயே தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாக திகழ்கிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து

கிருஷ்ணகிரி மாவட்ட 'இந்தியா 'கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை! ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. முன்னிலை!

கிருஷ்ணகிரி, நவ. 14-

தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ் ஐ ஆர்) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் எம் எல் ஏ தலைமையில் "பிரம்மாண்ட கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெற்றது. மேற்கு மாவட்ட செயலாளர் ஒய் பிரகாஷ் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார் .

நாட்டில் உள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் எஸ் ஐ ஆர்க்கு தொடக்கம் முதலில் இருந்தே எதிர்ப்பு தெரிவித்தும், ஒன்றிய அரசின் கைப்பாவையாகவும், எதேச்சாதிகாரப் போக்குடனும் தேர்தல் ஆணையம் செயல்பட்டு தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில் தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ளது.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் எதிர்ப்பார்த்தவாறே 04.11.2025.ஆம் தேதியிலிருந்து இன்று வரை களத்தில் எஸ்.ஐ.ஆர் பெரும்பாலான வாக்காளர்கள் நீக்கப்படும் அச்சத்தை உறுதிப்படுத்துகிறது.

தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ள 2002 / 2005 வாக்காளர் பட்டியல்கள் குழப்பம் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளன. எனவே இந்த எஸ் ஐ ஆர் சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும், அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி, எதேச்சாதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ் ஐ ஆர்) கொண்டு வந்துள்ளதை கண்டித்தும் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 'மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி' கட்சிகளின் சார்பில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை எதிரே கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் தலைமையிலும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் அவர்களது முன்னிலையிலும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளின் கண்டன உரையுடன் பிரம்மாண்டமான கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு மீனவர் நல

வாரியத் தலைவராக ஜோசப் ஸ்டாலின் நியமனம்!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை: நவ. 14 -

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், புதிய உறுப்பினர்களை நியமித்து அரசு உத்தரவு அளித்துள்ளது. தமிழகத்தில் மீன்பிடிப்பு மற்றும் அதன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபடும் மீனவத் தொழிலாளர்களின் விரிவான சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும், அவர்களது நலனை பேணும் பொருட்டும், கடந்த 2007ம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நல வாரியம் அமைக்கப்பட்டது.

உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மீனவர் நல வாரியம் அவர்களின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்தது. தமிழ்நாடு மீனவர் நல வாரியத்திற்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள படி அலுவல் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களை இரண்டாண்டு காலத்திற்கு நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

மேற்படி நியமனம் செய்யப்பட்ட, தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் தலைவர் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்கு பதவி வகிப்பர்.

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் தலைவராக கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல், ஜோசப் ஸ்டாலின் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அலுவல் சாரா உறுப்பினர்கள்: ஏ. தாஜுதீன், என்.ஜெ. போஸ், பி. அந்தோணி ஸ்டாலின், ஏ. ஜோஸ், வி. செல்வபாரதி, ஆர்.வி. கணேஷ், ஏ.பி. பன்னீர் செல்வம், எம். முருகன், எக்ஸ். லெனின், கோ. மனோகரன், எம். ஜெபமாலை பர்னாந்து, ஜேசு ராஜா, பி.எஸ்.ஜேசுராஜ் (எ) ராஜா, ஆகியோ நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர். தமிழ்நாடு மீனவர் நல வாரிய உறுப்பினர் செயலர் என்ற முறையில் நல வாரியத்தின் செயல்பாடுகளை கண்காணிப்பார். இந்நல வாரியம் முதல் தரமான குழுவாகக் கருதப்படும். அலுவல் சாரா உறுப்பினர்களின் அகவிலைப்படி மற்றும் பயணப்படி போன்ற வற்றிற்கு வாரியத்தின் உறுப்பினர் செயலரால் ஒப்பளிக்கப்பட வேண்டும். வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்கள் அரசு பதவிகளில் இருந்தால், அவர்கள் நல வாரியத்திலிருந்து ஏனைய பயன்பாடுகளை பெறமுடியாது.

திருவொற்றியூர் தொகுதி எர்ணாவூர் மாகாளியம்மன் கோயில் தெருவை சேர்ந்த கழக தொண்டர் சையது இப்ராஹிம் காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில் MCA இரண்டாம் ஆண்டு படிக்கும் தனது மகள் செல்வி ஹனீஷ் பாத்திமாவுக்கு மடிக்கணினி வேண்டும் என்று மாநில மீனவரணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ.விடம் கோரிக்கை வைத்தார், அவரின் கோரிக்கை ஏற்ற கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. ரூபாய் 65,000 மதிப்பில் புதிய HP மடிக்கணினி வழங்கினார்.